***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//299 /2022 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | ராமச்சந்திரன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 20.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் மில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் கொரோனா காலகட்டத்தில் செய்யது பீடி கம்பெனியில் விற்பனை பிரதிநிதியாக வேலை பார்த்த போது சுரண்டை சுற்று வட்டாரத்தில் செய்யது பீடியின் மார்க்கெட் குறைந்ததால் அதை கண்காணிக்க நான் சென்றேன். இந்த வழக்கை பற்றி வேறு எதுவும் நினைவில் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் போலிசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டு கொடுத்தேன். மேற்படி புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு</u>

<u>அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 17.11.2019 ம் தேதியன்று காலை 06.00 மணியளவில் வென்னிலிங்கபுரம் மாரியம்மன் கோவில் வடக்கு தெருவில் ஆஜர் எதிரிகள் தன்னுடைய இருசக்கர வாகனத்தில் வெள்ளை நிற சாக்குபையில் ரூ.50000 மதிப்புடைய போலியான செய்யது பீடி பண்டல்கள் 200, போலியான செய்யது பீடி லேபிள்கள் 500, போலியான செய்யதுபீடி லேபிள்கள் சிறியது 1000 ஆகியவற்றை கொண்டு உண்மையான செய்யது பீடி லேபிள்கள் ஒட்டிய பீடி போலவே கடைகளில் விற்கவேண்டும் என்ற எண்ணத்தில் எடுத்து சென்றார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையத்தில் நான் புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi